அரியலூர் மாவட்டக் கழகம் சார்பில் ஆண்டிமடத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள தளபதி அன்பகம், ஆண்டிமடம் ஒன்றிய கழக அலுவலகம் கட்டிடங்கள், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோரின் முழுவுருவச் சிலையை கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். உடன் கழக துணைப் பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்தகுமார், ஒன்றிய கழக பொறுப்பாளர் ஆர்.கலியபெருமாள் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

ஆண்டிமடத்தில் ‘தளபதி அன்பகம்’ – ஒன்றியக் கழகக் கட்டிடம்

பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலைகள்!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

அரியலூர்,மார்ச், 13–

அரியலூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் ஆண்டிமடத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ‘தளபதி அன்பகம்’ ஆண்டிமடம் ஒன்றிய கழக அலுவலக கட்டிடங்கள், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோரின் முழு திருவுருவச் சிலைகளைத் கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.

அதனை தொடர்ந்து அங்கு அமைக்கப்பட்ட 100 அடி கழகக் இருவண்ணக் கொடியினை ஏற்றிச் சிறப்பித்தார்.

தளபதி அன்பகத்தில், தலைவர் கலைஞர் படிப்பகம் மற்றும் ஆண்டிமடம் கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு ஒன்றியங்களுக்கான அலுவலகங்களும் செயல்படத் தொடங்கியுள்ளது.

அரியலூர் மாவட்டக் கழக வரலாற்றில் என்றென்றும் நிலைத்து நிற்கும் இந்த மாபெரும் விழாக்களில் கழகத் துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் பெருந்திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்ததனர்.

இந்த வரலாற்று சிறப்புமிக்க நிகழ்ச்சியில் கலந்துகொண்ட தமிழ்நாடு துணை முதலமைச்சர், இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தமது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்தார்.

இம்மாபெரும் விழாவில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியில் கழக துணை பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் பிரபாகரன், மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் ஆனந்த குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திர சேகரன், லதாபாலு, மாவட்ட பொருளாளர் இராஜேந்திரன், அரியலூர் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் அன்பரசு, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் ஆர். கலியபெருமாள், செந்தில்குமார், தனசேகர், இரா.கென்னடி, இரா.அண்ணாதுரை, மா.அன்பழகன், கோ.அறிவழகன், அசோக சக்ரவர்த்தி, இரா.மணிமாறன், பூ.செல்வராஜ், வி. எழில்மாறன்,

தனவேல், நா.கணேசன், தெய்வ.இளையராஜா, ஏ.ஜி.எஸ்.முருகன், நகர செயலாளர் வெ.கொ.கருணாநிதி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி இராஜேந்திரன், பேரூர் செயலாளர் அல்போன்ஸ், உடையார்பாளையம் பேரூராட்சி தலைவர் மலர்விழி ரஞ்சித்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் சி.ஆர்.எம்.பொய்யாமொழி, வி.எம். ஷாஜகான், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் அருண்ராஜா, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் டேவிட், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.ஆர்.முருகேசன், வீர.சிவா, ச. வசந்தபகலவன், குணசீலன்,தமிழ்மாறன், ஆண்டிடம் கிழக்கு ஒன்றிய மேற்பார்வையாளர் கு.பிரபா கரன், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் , பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

சைதாப்பேட்டை தொகுதி – கோடம்பாக்கம் மண்டலத்தில்

ரூ. 1.44 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, மார்ச்.13-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, நேற்று (12.03.2026) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூபாய் 1.44 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மக்கள் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு140, மேற்கு மாம்பலம், எல்லையம்மன் கோயில் தெருவில் 140வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 16ஆம் நாள் காரிய மேடையினைத் திறந்து வைத்தார். இந்த 16 ஆம் நாள் காரிய மேடை 452 சதுர அடி பரப்பளவில்அமைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, வார்டு 140, கோடம்பாக்கம் சாலையில் உள்ள சென்னை ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 140வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.32 இலட்சம் மதிப்பீட்டில், அமைக்கப்பட்ட திறந்த வெளி அரங்கத்தினை திறந்து வைத்தார். இந்த திறந்த வெளி அரங்கம் சுமார் 2460 சதுர அடி பரப்பளவில் 500 மாணவர்கள் அமரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், கூட்டம் நடைபெறுவதற்கு மிக பயனுள்ளதாக இருக்கும்.

பின்னர், வார்டு139, மேற்கு ஜோன்ஸ் சாலையில் மாநகராட்சி மூலதன நிதியின் கீழ், ரூ.73.50 இலட்சம் மதிப்பீட்டில் நவீன ஸ்டெயின்லெஸ் கூரையுடன் அமைக்கப்பட்ட மேற்கு சைதாப்பேட்டை பேருந்து நிலையத்தினை அமைச்சர் திறந்து வைத்தார். இந்த பேருந்து நிலையத்தில் ஆண், பெண் மற்றும் மாற்றுத்திறனாளிகள் கழிவறைகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, கண்காண்பு கேமிராக்கள், இழுவிசை மேற்கூரை, பயணிகள் இருக்கைகள், நடைபாதை, மின் விளக்குகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் 242 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பேருந்து நிலையம் மூலமாக ஒரு மாதத்திற்கு சுமார் 3,54,841 பயணிகள் பயன்பெறுவர்.

இதனைத் தொடர்ந்து, வார்டு142, கொத்தவால் சாவடி தெருவில், ரூ.2.40 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதியில் அமைக்கப்பட்ட உயர்மின் கோபுர விளக்குகளை மக்கள் பயன்பாட்டிற்கு ஒளிரூட்டினார்.

பின்னர், தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில் வார்டு 142க்குட்பட்ட, விநாயக புரம், இரத்தினத்தோட்டம் மக்களின் நீண்ட கால பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் வகையில் ரூபாய் 17.50 இலட்சம் மதிப்பீட்டில் 250 kw புதிய மின்மாற்றியினைப் பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றி தந்த அமைச்சர் அவர்களுக்கு, அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் பொன்னாடை அணிவித்து தங்கள் நன்றியினைத் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சிகளில் மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக்குழுத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி (கோடம்பாக்கம்), ஆர்.துரைராஜ் (அடையாறு) மாமன்ற உறுப்பினர்கள் ப.சுப்பிரமணி, எம். ஸ்ரீதரன், மதன்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வேலூர் - நெய்வேலி விமான நிலையங்கள் இயங்கப்போவது எப்போது?

மக்களவையில் – தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, மார்ச்.13-

தமிழ்நாட்டில் உள்ள வேலூர், நெய்வேலி விமான நிலையங்களை செயல்பாட்டிற்கு கொண்டுவருவதில் நீண்டகால தாமதம் ஏற்படுவது ஏன்? என்றும் அதிகரித்து வரும் விமானப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் கூடுதல் விமான சேவைகளுக்கு அனுமதி அளிக்க ஒன்றிய அரசின் நடவடிக்கை என்ன என்றும் மக்களவையில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் எம்.பி. கேள்விகளை எழுப்பியுள்ளார். அதன் விவரங்கள் வருமாறு:-

UDANRCS என்ற ஒன்றிய அரசின் விமான சேவை திட்டத்தின்கீழ் தொடர்ந்து அறிவிப்புகள் வெளியிடப்பட்ட போதிலும், தமிழ்நாட்டில் உள்ள வேலூர் மற்றும் நெய்வேலி ஆகிய விமான நிலையங்களுக்கு உரிமம் வழங்குவதிலும், அவற்றைச் செயல்பாட்டிற்குக் கொண்டுவருவதிலும் ஏற்பட்டுள்ள நீண்டகால தாமதம் குறித்து ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன? அவ்வாறு இருப்பின் அது குறித்த விவரங்கள் என்ன? குறிப்பிட்ட அந்த விமான நிலை யங்களுக்கு உரிமம் பெறுவதற்கும், செயல்பாட்டு அனுமதி பெறுவதற்கும் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் குறித்த விவரங்கள் என்ன? மேலும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட தேதிகள், அதுகுறித்து ஆய்வுகள், குறைபாடுகள், அதன் தற்போதைய நிலை, தாமதத்திற்கான காரணங்கள் என்ன? மற்றும் இறுதி ஒப்புதல் மேற்கொள்ளப்பட்ட சுட்டிக்காட்டப்பட்ட வழங்குவதற்காக திருத்தப்பட்ட காலக்கெடு எதுவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா?

விமான போக்குவரத்து மண்டல இணைப்பு திட்டங்களில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக, வடக்கு மற்றும் மத்திய தமிழ்நாட்டிற்கு ஏற்படும் பொருளாதார இழப்பீட்டை அரசு மதிப்பிட்டுள்ளதா? ஆம் எனில், அது குறித்த விவரங்கள் என்ன?

அதிகரித்து வரும் விமானப் பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், சேலத்திலிருந்து சென்னைக்கும், மதுரையிலிருந்து சென்னைக்கும் கூடுதலாக திட்டமிடப்பட்ட விமானச் சேவைகளை அறிமுகப்படுத்தவோ அல்லது ஒப்புதல் அளிக்கவோ அரசு உத்தேசித்துள்ளதா? ஆம் எனில், அது குறித்த விவரங்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடு விவரங்கள் என்ன?. இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

ஜி.ஆர்.திருமலை தலைமை! ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. பங்கேற்பு

கழக வழக்கறிஞர்கள் எஸ்.சுதாகர் - எஸ்.பிரவீனா சீர்திருத்த திருமண விழா!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நடத்தி வைக்கிறார்!

திருவள்ளூர் மார்ச் 13;

திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி நகர பகுதியை சார்ந்த கழக வழக்கறிஞர்கள் எஸ்.சுதாகர் எஸ். பிரவீனா ஆகியோரின் சீர்திருத்த திருமணம் விழா பூவிருந்தவல்லி டிராங்க ரோட்டில் உள்ள சீனிவாசா திருமண மண்டபத்தில் இன்று (13-03-2026 - வெள்ளிக்கிழமை) மாலை 6:30 மணி அளவில் நடைபெறுகிறது.

இதில் நகரக் கழகச் செயலாளர் ஜி.ஆர் திருமலை தலைமை தாங்குகிறார். நகர் மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர் நகர் மன்ற துணைத் தலைவர் க.ஸ்ரீதர், மாவட்ட பிரதிநிதி ப.அன்பழகன், நகரக் கழக நிர்வாகிகள் தாஜுதீன் துரை பாஸ்கர், அப்பர் ஸ்டாலின், டில்லி ராணி மலர்மன்னன், அசோக்குமார், ஜெ.சுதாகர் புண்ணிய கோட்டி, பி. சௌந்தரராஜன், ஏ.ராஷிக், ஷாஜகான், விமல் ஆனந்த், யுவராஜ், தசரதன், சுகுமாரன், துரை மணி, ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள்.

மாவட்ட நிர்வாகிகள் ம.இராஜி, வி.ஜெ. சீனிவாசன், எஸ். ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதரன், பா. நரேஷ் குமார், ப.ச. கமலேஷ், டி.தேசிங்கு, ஜெ.மகாதேவன், சு.அன்பழகன், ஜெயசீலன், நித்தியானந்தம், ptc பன்னீர்செல்வம், செழியன், இரா மணி, ஏழுமலை ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இந் திருமண விழாவில் மாவட்ட கழகச் செயலாளர் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்துகொண்டு சீர்திருத்த திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

இதில் பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி வாழ்த்துரை வழங்குகிறார்.

இதில் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் கே.ஜெ. ரமேஷ், சி.ஜெரால்டு, பிடிசி. செல்வராஜ், பிரபு கஜேந்திரன், த.எத்திராஜ், ஜி. ராஜேந்திரன், ஜி. விமல் வர்ஷன் , முத்தமிழ்செல்வன், வி.குமார் , எஸ்.சங்கர், மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் ஜி.உதயகுமார், சண்பிரகாஷ் , பேபி சேகர், பொன் விஜயன், ஜி. நாராயண பிரசாந்த், என்.இ.கே. மூர்த்தி மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்டக் கழகச் செயலாளர்கள் நகர மன்ற உறுப்பினர்கள் கழக இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் வழக்கறிஞர் அணி சார்ந்த நிர்வாகிகள் கழக வழக்கறிஞர்கள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

இந்நிகழ்ச்சி முடிவில் நிர்வாகிகள் பிரபாகரன், ரமேஷ், இனியவர்மன், பிரவீன், ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் மேனல்லூர் ஊராட்சி காட்டுப்பாக்கத்தில் ஆரம்ப சுகாதார துணை நிலையம் தினையாம் பூண்டி ஊராட்சி ஆண்டித்தாங்களில். அங்கன்வாடி மைய கட்டிடத்தை மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ திறந்து வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் கெ. ஞானசேகரன், பேரூர் செயலாளர் என்.எஸ். பாரிவள்ளல், பேரூராட்சி மன்ற தலைவர் பொன். சசிகுமார், துணைத்தலைவர் இளமதி கோவிந்தராஜ் உள்ளிட்ட ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம் நாலூர் ஊராட்சியில் நீர்வளத்துறை சார்பில் ரூ.37 கோடி மதிப்பீட்டில் சென்னை சுற்றுவட்ட சாலை (CPRR) பிரிவு1 (Reach1) அமைப்பதன் காரணமாக சேதமடைந்த நாலூர் பெரிய மற்றும் நாலூர் சிறிய ஏரி உட்பட 9 ஏரிகளை மறுசீரமைத்தல் மற்றும் புனரமைக்கும் பணிகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் , பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர், மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், ஆரணியாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர் ஜி.கார்த்திகேயன், மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன், ஒன்றிய செயலாளர் ஆ.ராஜா, மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.